[1979 நவம்பர் 7

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூரில் வணிக வரி அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இருந்து வருகிறது, அதற்கான கட்டடம் கட்டப்பட உள்ளதா? இல்லையென்றால், கட்டுவதற்குப் பரிசீலிக்கப்படுமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே கூட்டுறவுத் துறைக்கு ஒரு கட்டடம் கட்டுவதற்கான பணி ஆய்வில் உள்ளது. பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கான பணியும் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலேயும் அரசு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இருப்பதை அரசாங்கம் அறியும். ஆகவே அந்தக் கட்டடங்களை எல்லா இடங்களிலும் அரசே கட்டுகின்ற வகையில் தனியாக இதற்காக ஒரு வாரியம் அமைத்தாவது எல்.ஐ.சி., தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இவைகளிலிருந்து கடன் பெற்று அவைகளைக் கட்டி, அந்தக் கடனைத் திரும்பக் கொடுக்கக்கூடிய முறையிலே முயற்சிகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்வருமா? அரசாங்கம் இந்த முறையில் என்ன நடவடிக்கை இதுவரையில் எடுத்து இருக்கிறது ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): இப்போது அரசு அலுவலகங்கள் கட்டடங்கள் கட்டும் பணிகள் மிகவும் திறமையாக நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

கிருஷ்ணகிரி வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

* வினா எண் 122—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து காவேரிப் பட்டணத்தினை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி வட்டம் உருவாக்கக் கோரி ஏதேனும் அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம், தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து காவேரிப்பட்டணத்தினை தலைமையிடமாகக்

1979 நவம்பர் 7]

கொண்டு ஓர் தனி வருவாய் வட்டம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை அனுப்பியுள்ளார்கள். அது மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பப்பட்டு மாவட்ட ஆட்சியாளர் சிபாரிசு செய்திருக்கிறார். விரைவில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கை ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. அரசு ஏற்கெனவே பலமுறை பரிசிலித்து வருகிறது. வருவாய் வாரியத்திற்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கிறது. அரசுக்கும் கொடுத்திருக்கிறோம் என்று நம்புகிறேன். ஆகவே அருள்கூர்ந்து உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 10 ஆண்டுகளாக அந்தக் கோரிக்கை இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் என்னிடத்திலே அந்தக் கோரிக்கை வந்து 6 மாதங்கள் ஆகின்றன. வருகிற ஆண்டில் அதைப் பிரிப்பதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை, பேராவூரணி வட்ட குத்தகை சாகுபடியாளர்கள்.

*** வினா எண் 123—திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை பேராவூரணி வட்டங்களில் குத்தகை சாகுபடி உரிமைச் சட்டம் இயற்றியதிலிருந்து 1978 ஆம் ஆண்டு முடிய குத்தகை உரிமையை பதிவு செய்ய வந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) இதுவரை எத்தனை சாகுபடியாளர்களுக்கு குத்தகை பதிவு செய்யப்பட்டுள்ளது?

(இ) குத்தகை பதிவு செய்ய மனுக் கொடுத்து 3 மாதத்திற்கு மேற்கொண்டும் முடிவெடுக்க முடியாமலிருக்கும் மனுக்கள் உள்ளனவா?

(ஈ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

	பட்டுக்கோட்டை வட்டம்	பேராவூரணி வட்டம்
(அ)	3,585	133
(ஆ)	3,573	119

(இ) இல்லை.

(ஈ) இக் கேள்விக்கு இடமில்லை.